ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2113/61 - 2019 මාර්තු මස 08 වැනි සිකුරාදා - 2019.03.08

*2113/61 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**கல்முனை மாநகர சபை**

*2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 1725/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களை இரத்துச் செய்யும் அறிவித்தல்*

கல்முனை மாநகர சபையின் மாநகர முதல்வர் ஆகிய நான், மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) பிரிவு 14(5) இன்கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் பிரகாரம், 2011 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முடிவடைந்து அதற்கான உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படும் வரை கல்முனை மாநகர சபையின் விசேட ஆணையாளராக கடமையாற்றிய எம். எம். நவ்பல் என்பவரினால் 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதியிடப்பட்டு 1725/22 ஆம் இலக்கத்தில் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை இத்தால் வலிதற்றதாக்கி இரத்துச் செய்கிறேன்.

சட்டத்தரணி ஏ. எம். றகீப்,
மாநகர முதல்வர்,
கல்முனை மாநகர சபை.

*மாநகர சபை அலுவலகம்,*
*கல்முனை,*
*2019, பெப்புருவரி 25.*

*03-1051*

1A - G 29609 — 19 (2019/03)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## கல்முனை மாநகர சபை

### கல்முனை மாநகர சபை எல்லைக்குள் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ சேவை வழங்கலுக்கான வரி விபரங்கள் தொடர்பிலான அறிவித்தல்

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டு 1989.01.28 ஆந் திகதிய 541/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், கிழக்கு மாகாண ஆளுநரினால் 1999.08.13 ஆந் திகதிய 1093 ஆம் இலக்க உள்ளூரட்சி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் அங்கீகரிக்கப்பட்டதன் பேரில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் 2002.07.06 ஆந் திகதிய 1240 ஆம் இலக்க உள்ளூராட்சி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் கல்முனை மாநகர சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான துணைவிதிகளின் பாகம் XI (கழிவகற்றல் தொடர்பான துணைவிதிகள்) சட்டத்தின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட 4 ஆம் துணைவிதியால் கல்முனை மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரமும் 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதிய சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டு 2013.07.26 ஆந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட 1808 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அமுல்படுத்தப்பட்ட திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ சேவை வரியானது கல்முனை மாநகர சபையின் 2019.01.14 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன்.*

| தொ. இல. | திண்மக் கழிவகற்றல் சேவை பெறுநரின் வகை | திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ சேவை வரி (ரூபா) |
|---|---|---|
| 01. | குடியிருப்பு வீடு ஒன்று நாளொன்றிற்கு | 10.00 |
| 02. | வியாபார நிலையங்கள் நாளொன்றிற்கு (சிற்றுண்டிச்சாலைகள், உணவகங்கள், வாழைப்பழ வியாபார நிலையங்கள் தவிர்ந்தவைகள்) | 15.00 |
| 03. | தொழிற்சாலைகள் நாளொன்றிற்கு | 20.00 |
| 04. | சிற்றுண்டிச்சாலைகள், உணவகங்கள், வாழைப்பழ வியாபார நிலையம் மற்றும் மாட்டு இறைச்சி, ஆட்டு இறைச்சி, கோழி இறைச்சி, மீன் போன்ற விற்பனை நிலையங்களுக்கு ஒரு கிலோ கிராம் (1 Kg) | 5.00 |
| 05. | பாவித்த இளநீர் மற்றும் தெம்பிலி குரும்பை ஒன்றிற்கு (சரிபாதியாக வெட்டப் பட்டிருத்தல் வேண்டும்.) | 1.00 |

மேற்குறித்த திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ சேவை வரிகள் அனைத்தும் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

சட்டத்தரணி ஏ. எம். றகீப்,
மாநகர முதல்வர்,
கல்முனை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கல்முனை,
2019, பெப்புருவரி 25.

03-1052

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.